பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 12 வியாழக்கிழமை 26.05.2022 கதிர் 95

## பாடசாலை வளாகத்தினுள் மீட்கப்பட்டது கைக்குண்டு!

திருகோணமலை - குச்சவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் புதைக்கப்பட்ட நிலையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது எனக் குச்சவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

குச்சவெளி அந்நூரிய்யா பாடசாலை வளாகத்தினுள் அமைந்துள்ள மைதானத்தில் நேற்று இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

அந்நூரிய்யா பாடசாலை வளாகத்தின் ☞2

# உணவுத் தட்டுப்பாடு மேலும் உக்கிரமடையும்



## நீர்ப்பாசனத் திணைக்களம் அபாய எச்சரிக்கை

இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு மேலும் உக்கிரமடையும் என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் டி.அபேசிறிவர்தன அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுபோகத்துக்குத் தேவையான நடவடிக்கைகள் சில மாவட்டங்களில் தாமதமாகியுள்ளன.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் செய்கை நடவடிக்கைகள் நிறைவுபெறாவிடின், நாட்டில் உணவுத் தட்டுப்பாடு மேலும் உக்கிரமடையும்.

தற்போது நெற்செய்கையைச் செய்ய முடியாது போனால் மாற்றுப் பயிர்களை விவசாயிகள் பயிரிட வேண்டும் - என்றார்.

## வாட்டி வதைக்கும் வறுமை

# பலர் தொழிலை இழக்க நேரிடும்



## மத்திய வங்கி ஆளுநர் ஆரூடம்

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் பலர் தொழில் வாய்ப்புக்களை இழக்க வேண்டியேற்படும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் பலருக்கு வறுமை ஏற்படக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ☞2

## மஹிந்தவிடம் சி.ஐ.டியினர் வாக்குமூலம்




இம்மாதம் 09ஆம் திகதி காலி முகத்திடல் மற்றும் கொள்ளுப்பிட்டி ஆகிய பகுதிகளில் போராட்டக்காரர்கள் மீது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று மாலை அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர் ☞2

## சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து

## கடன் பெறுவதற்கான வேலைத்திட்டம் அடுத்த மாத நடுப்பகுதியில் அமுலாகும்

### பிரதமர் ரணில் நம்பிக்கை



இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள நிலையில்தான் பிரதமர் பதவியை நான் ஏற்றேன். இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறுவதற்கான வேலைத்திட்டம் எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் அமுலாகும் என எதிர்பார்க்கின்றேன்.

- இவ்வாறு பிரதமரும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய ☞2

### '21' திருத்த வரைவு தொடர்பில்

## பிரதமர் தலைமையில் நாளை விசேட கூட்டம்

உத்தேச 21 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

## மீண்டும் வருவார் மஹிந்த

### 'மொட்டு' எம்.பி. அறிவிப்பு



நாட்டு மக்கள் கோரிக்கை விடுத்தால், மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் வருவார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற ☞2

## மீன், முட்டை, இறைச்சி விலையும் அதிகரிப்பு!

நாட்டில் எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் மீன், இறைச்சி, முட்டை ஆகியவற்றின் விலையும் மேலும் உயர்வடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் முட்டை ஒன்றின் விலை 38 அல்லது 40 ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், எரிபொருள் விலை அதிகரிப்பு, கோழித் தீவனத்தின் ☞2

### இரண்டு கோடி ரூபா பெறுமதியான

## ஐஸ் ரக போதைப்பொருளுடன் நீர்கொழும்பில் மூவர் சிக்கினர்

இரண்டு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் ரக போதைப்பொருளுடன் நீர்கொழும்பில் 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ☞2

## கோட்டாவுக்கு ஒட்சிசன் வழங்கி காப்பாற்றி வருகின்றார் ரணில்



### கஜேந்திரகுமார் சாடல்

இன்றைக்கோ நாளைக்கோ என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகக் கூடிய சூழல் உருவாகிக் கொண்டிருக்கும் நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவர்களுக்கு ஒட்சிசன் ☞2

## மே 31இல் பதவி விலகுகிறார் இராணுவத் தளபதி சவேந்திர



அரசியல் நெருக்கடியால் ஏற்பட்டுள்ள கடும் அழுத்தங்களையடுத்து இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா எதிர்வரும் 31ஆம் திகதி தமது பொறுப்பிலிருந்து விடுகை பெறவுள்ளார்.

அவர் புதிய பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியாக எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி ☞2

## இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்ற இலங்கையர்கள் 1,585 பேருக்கு வாய்ப்பு

### அமைச்சர் நஸீருடன் பயண ஏற்பாடுகள் அமைப்பினர் சந்திப்பு



புனித ஹஜ் பயண ஏற்பாடுகள் அமைப்பினருக்கும் சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட்டுக்கும் இடையில் நேற்று சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இந்தமுறை ஹஜ் பயண ஏற்பாடுகளைச் செய்வது குறித்தும், அதில் ஏற்பட்டுள்ள தடைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தாக்கம் கரணம் கடந்த ☞2

## ஐஸ் ரக போதைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் ஒருவர் நேற்றுக் காலை நீர்கொழும்பில் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மற்றுமொரு சந்தேகநபர் நீர்கொழும்பு பஸ் தரிப்பிட பகுதியில் நேற்றுப் பிற்பகல் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

இந்தநிலையில் குறித்த இரண்டு சந்தேகநபர்களிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மேலும் ஒருவரை நீர்கொழும்பு - ரமணி மாவத்தையில் வைத்து நேற்றிரவு பொலிஸார் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதானவர்கள் நீர்கொழும்பு மற்றும் மருதானைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கோட்டாவுக்கு ஒட்சிசன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்துக் காப்பாற்றுகின்ற வகையில் செயற்படுவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தவித வெட்கமும் இல்லாமல் புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் உதவிகளைவழங்கக்கோரியும்முதலீடுகளைச் செய்யக் கோரியும் கோட்டா - ரணில் அரசதரப்பினர்அழைப்புவிடுக்கின்றனர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் ஒற்றையாட்சிக்குள் ஒருமித்த நாடு, ஏக்கிய ராஜ்ய என்ற நாடகத்தைக் கூட்டமைப்புடன் இணைந்து நடத்திய ரணில் விக்கிரமசிங்க, தற்போது கோட்டாபய ராஜபக்ஷ கலைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் இருந்தபோது அவரைக் காப்பாற்ற முற்படுகின்றார்.

இந்த அரசால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்களினுடைய உதவிகளையே இன்று நாடி இருப்பதன் மூலம் மிகவும் கேவலமான நிலையில் இவர்கள் உள்ளனர் என்பதை அறியலாம். தமிழ் மக்கள் சரியான கோணத்தில் இதனை விளங்கிக் கொண்டு முற்றுமுழுதாக இந்த அரசை நிராகரிக்க வேண்டும்.

ரோம் சாசனத்தில் இலங்கை கையொப்பம் இட்டு, இங்கு நடந்த இனப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பொறுப்புக்கூற வைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதனூடாகவும், தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கின்ற சமஷ்டி தீர்வை வழங்கினால் மட்டும் தான் தமிழ் மக்கள் தங்கள் நிலைப்பாடுகளை மாற்ற வேண்டும் என்பதே என்னுடைய கருத்து.

சிங்கள மக்களும் இதனை விளங்கிக் கொண்டு, எதிர்காலத்தில் தாங்கள் தெரிவு செய்கின்ற தலைவர்கள் இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளும்போது பொருளாதாரத்தை அதனூடாகக் கட்டியெழுப்ப தமிழ் மக்கள் உதவி செய்வார்கள் - என்றார்.

## இம்முறை ஹஜ் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு வருடங்களாக புனித ஹஜ் யாத்திரைக்கு இலங்கையிலிருந்து எவரும் செல்லவில்லை.

இந்நிலையில், இந்தமுறை 1,585 பேருக்கு ஹஜ் கடமையை நிறைவேற்ற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி உள்ளிட்ட சில விடயங்களால், பயணக் கட்டணங்களை டொலரில் செலுத்த வேண்டியுள்ளது என அந்த அமைப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரச அனுமதியுடன் குறித்த நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இந்தச் சந்திப்பின்போது அவதானம் செலுத்தப்பட்டது என சுற்றாடல் அமைச்சரின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## கடன் பெறுவதற்கான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர்காணலின்போதே அவர், இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இயலுமானவரை செலவினத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த வருடத்துக்குள் 4 பில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற எதிர்பார்க்கின்றோம்.

அதேநேரம், சீனா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளினதும் உதவிகள் பெறப்படவுள்ளன.

கிடைக்கப்பெறும் உதவிகளில், அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எனினும், நாட்டின் பணவீக்கமானது 40 சதவீதம் வரை அதிகரிக்கும்.

எவ்வாறாயினும், 2025ஆம் ஆண்டு வரை ஒரு சதவீத ஆரம்ப மிகை நிலுவையை அடைவதை இலக்காக நிர்ணயித்துள்ளேன். - என்றார்.

## மீண்டும் வருவார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் டீ.பி. ஹேரத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணியின் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார். எனினும், மக்கள் அவரை மீள அழைத்தனர். அவரும் வந்து, ஆட்சியைப் பிடித்தார். எனவே, மக்கள் கோரினால் அவர் மீண்டும் வருவார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாம் ஆதரவு வழங்குவோம். தற்போதைய சூழ்நிலையில் இணைந்து பயணிப்பதுதான் சிறப்பு - என்றார்.

## பிரதமர் தலைமையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

உத்தேச 21 ஆவது திருத்தச் சட்டமூலம் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இதுதொடர்பில்கட்சித்தலைவர்களின் கருத்துகளை உள்வாங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமையவே நாளை கூட்டம் நடைபெறுகின்றது.

அதன்பின்னர் 21 ஆவது திருத்தச் சட்டமூலம் திருத்தப்பட்டு, எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் மீண்டும் முன்வைக்கப்பட்டு அனுமதி பெறப்படும்.

## மீன், முட்டை, இறைச்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலை அதிகரிப்பு காரணமாக ஒரு முட்டையின் உற்பத்தி செலவு மாத்திரம் 31 ரூபாவாக அதிகரித்துள்ளது. கோழித் தீவன விலை உயர்வால் சிறு கோழி வியாபாரிகள் பலர் தொழிலை விட்டு வெளியேறியுள்ளனர்.

65 முதல் 70 ரூபா வரை விற்கப்பட்ட ஒரு கிலோ கோழித் தீவன உணவுப் பொதியின் விலை 220 ரூபாவாக அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை உயரும்போது இது மேலும் அதிகரிக்கும்.

பண்ணையாளர்கள் இந்தத் தொழிலில் நிலைத்திருக்க வேண்டுமானால், ஒரு முட்டையை குறைந்தபட்சம் 38 அல்லது 40 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் - என்றார்.

## மஹிந்தவிடம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பல அரசமட்ட அதிகாரிகளிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், அதில் சிலர் கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பலர் தொழிலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை வழமையான முறையில் தொடர முடியாமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 6 மாதக் காலப்பகுதிக்குள் பணவீக்கத்தை எவராலும் 30 சதவீதத்துக்குக் கீழ் கொண்டுவர முடியாது.

அரசு சலுகை வழங்காதவிடத்து சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை நம்பியுள்ளவர்களின் வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்படும். இதனால் பலர் தமது தொழில் வாய்ப்புக்களை இழக்க வேண்டியேற்படும் - என்றார்.

## பாடசாலை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைதானத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது புதைக்கப்பட்ட நிலையில், காணப்பட்ட கைக்குண்டு தொடர்பில் பிரதேச மக்கள் குச்சவெளிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து கைக்குண்டை மீட்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குச்சவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மே 31இல் பதவி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியேற்கவுள்ளார்.

அவர் இதுவரை காலமும் பதில் பாதுகாப்பு பதவி நிலை பிரதானியாகச் செயற்பட்டு வந்தார்.

இதேவேளை, இராணுவப் பதவி நிலை பிரதானி பதவியிலிருந்து விடுகை பெறும் மேஜர் ஜெனரல் விகும் லியனகே, புதிய இராணுவத் தளபதியாக எதிர்வரும் முதலாம் திகதி நியமிக்கப்படவுள்ளார்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நோட்டு அடிக்கும் பொருளாதாரம்

'வரவு எட்டணா, செலவு பத்தணா, கடைசியில் துந்தணா... துந்தணா...' – என்று ஒரு சினிமா பாடல் உண்டு.

இலங்கையைப் பொறுத்தவரை இப்போது துந்தணா நிலைமைதான். ஆனால் அந்த சினிமாப் பாடலில் கூறிய துந்தணாவை விட மோசமான துந்தணா இக்கட்டு இப்போது இலங்கைக்கு.

அந்தப் பாட்டின் படி, வரவு எட்டணா இருக்கும்போது தான் செலவு பத்தணா என்ற நிலைமை. அதாவது வரவை விட ஆகக் கால் பங்குதான் செலவு அதிகம்.

ஆனால் இலங்கையின் இன்றைய நிலைமை அப்படிக் கூட இல்லை. அதையும் தாண்டிய மிக மோசமான கட்டம்.

முதலில் அந்நிய செலாவணி வருமானம் இல்லை, அதனால் எரிபொருள், மருந்து, உணவு வகைகள் உட்பட அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்ய வழி இல்லை என்றார்கள். ஆக டொலர் கையிருப்பு நாட்டில் இல்லை என்றுதான் கவலைப்பட்டோம்.

ஆனால், புதிதாகப் பதவியேற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உண்மையைப் போட்டுடைத்தார். டொலர் வருமானமும் இல்லை, ரூபா வருமானமும் இல்லை, எல்லாம் கைநழுவிப் போய் விட்டன என்பதுதான் நிஜ நிலைமை என்றார் அவர்

ரூபா வருமானம் – அதாவது உள்நாட்டு வருமானம் – கூட நாட்டுக்கு இல்லை என்பதே நிலைமை என்று வெளிப்படுத்தியுள்ள ரணில் விக்கிரமசிங்க, இதுவரை அரசு எப்படி பிழைப்பு நடத்திய என்ற உண்மையையும் அம்பலப்படுத்தினார். இனியும், உடனடியாகத் தொடர்ந்து அந்த வேலையைச் செய்வதை தவிர தமக்கும் வேறு மார்க்கம் தென்படவில்லை என்ற யதார்த்தத்தையும் நிதியமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்ட பின்னர் அவரே வெளிப்படுத்தி இருக்கின்றார்.

இதுவரை காலமும் வெறுமனே ரூபா நோட்டுகளை அச்சிட்டுத் தள்ளி, அவற்றைப் புழக்கத்தில் விட்டமை மூலம் மட்டுமே நாட்டின் நிர்வாகம் நடந்திருக்கின்றது.

இன்றைய நிலையில் அடுத்து ஒரு ட்ரில்லியன் ரூபா (அதாவது ஒரு லட்சம் கோடி ரூபா) பண நோட்டுகளை அச்சிட்டு வெளியிட்டு, அதன் மூலமே அரசுக்கு ஒட்சிசன் கொடுத்து, நாட்டை நிர்வகிக்க முடியும் என்பதைக் கோடி காட்டியிருக்கிறார் புதிய நிதி அமைச்சர்.

இப்படி வருமானம் இல்லாமல் பண நோட்டுகளை அச்சிட்டுத் தள்ளி புழக்கத்தில் விட்டால் பணத்தின் பெறுமதி வீழும். பணவீக்கம் எகிறும். விலைவாசி பிய்த்துக் கொண்டு போகும். வங்கி வட்டி வீதங்கள் அதிகரிக்கும். ஒரு கட்டத்தில் பண நோட்டுக்களை வெறும் கற்றைக் காகிதங்களாக மதிக்கும் நிலைதான் வரும்.

கடந்த ஆண்டு வரை ஒற்றை இலக்கத்தில் இருந்த பணவீக்க அதிகரிப்பு கடந்த மாதத்தில் 33.8 சத வீதத்தை எட்டி பிடித்து விட்டது. அது இந்த மாதத்தில் 40 வீதத்தை நிச்சயம் தொடும். புதிய நிதி அமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட இதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இலங்கைப் பணத்தின் பெறுமதி இழப்புக்கான அளவீடு இது. உலக நாடுகளில் மிக மோசமான பண வீக்கத்தை எட்டியிருக்கும் நாடுகளில் மூன்றாவது இடத்தில் இலங்கை இருக்கின்றது.

இந்த நிலைமை நீடிக்குமானால் இலங்கை நோட்டு முற்றாக மதிப்பிழக்கும். வங்கிகளில் மக்கள் ரூபாவாக சேர்த்து சேமிப்புக் கூட பெறுமதி இழந்து போய்விடும்.

'ஐயோ! வெறுமனே நோட்டுக்களை அச்சிட்டுத் தள்ளி நாட்டைக் குட்டிச் சுவராக்குகின்றார்களே!' – என்று எதிரணியில் இருந்து பொருமிய ரணில் விக்கிரமசிங்க கூட, இப்போது நாட்டின் பிரதமராகவும், நிதி அமைச்சராகவும் பொறுப்பேற்ற பின்னரும் கூட, அதையே தாமும் தொடர்ந்து செய்வதைத் தவிர தமக்கு வேறு மார்க்கம் இல்லை என்று உண்மையை ஒப்புக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அப்படியாயின் இந்த நாட்டின் பொருளாதாரம் மீளெழுவது என்பது மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலைதான்.

# தவறான மதிப்பீடுகளைச் சமர்ப்பித்து நாடாளுமன்றை தவறாக்கிய திறைசேரி

## கண்டுபிடித்தார் மத்திய வங்கி ஆளுநர்



தவறான மதிப்பீடுகளை சமர்ப்பித்து திறைசேரி, நாடாளுமன்றத்தை தவறாக வழிநடத்தியுள்ளார் என நாடாளுமன்ற பொது நிதி தொடர்பான குழுவிடம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜதார்த்தமற்ற முறையில் அதிக வருவாய் மதிப்பீடுகள் நாடாளுமன்றுக்கு காட்டப்பட்டுள்ளன. இதனடிப்படையிலேயே குறைக்க முடியாத செலவீனங்கள் மதிப்பிடப்பட்டுள்ளன. இது உண்மைக்குப் புறம்பானது என்று தெரிந்தும், தவறான மதிப்பீடுகளைச் சமர்ப்பித்து நாடாளுமன்றம், தவறாக வழிநடத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கூறப்பட்டபடி, வருமானம் வெளிப்படையாக வரவில்லை. பணம் அச்சிடுதல் அல்லது ஏனைய நிதி பல்வேறு வழிகளில் இந்த வருவாய் மதிப்பீடு காட்டப்பட்டுள்ளமையால், செலவீனங்களுக்கு ஏற்ப கடனை அதிகரிக்கவேண்டியிருந்தது.

இதன் காரணமாகவே கடன் பொறி உருவானது என்று நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஒவ்வொரு மாதமும் அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக மாத்திரம் இலங்கைக்கு சுமார் 60 அல்லது 65 கோடி அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றன என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் மின்சார சபை, எரிவாயு நிறுவனம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிடம் டொலர்களை பெற்றுக்கொள்வதற்கு போதுமான ரூபாக்கள் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்



கிளிநொச்சி மாவட்டத்தில் இறுதியாக நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (புதன்கிழமை) பகல் 10 மணிக்கு நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அக்கராயன் ஆற்றிலிருந்து ஆறுகளைப் பாதுகாப்போம் எனும் வேலைத் திட்டத்தில் ஆற்றிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மணல் விடயம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் இரணைமடு நீர்ப்பாசனத் திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், கடந்த பெரும் போகத்தின் போது சேதனப்பசளையை பயன்படுத்தியதால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட விளைச்சல் பாதிப்பு, அவற்றுக்கான நஷ்டஈடு கிடைக்காமை, மழையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நஷ்டஈடு கிடைக்காமை என பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் துறைசார் திணைக்கள அதிகாரிகள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# ஓட்டோவில் 140 லீற்றர் பெற்றோல் 41 வயதுடைய ஒருவர் கைதாகினார்

அனுமதிப்பத்திரம் இன்றி ஓட்டோவில் 140 லீற்றர் பெற்றோலைக் கொண்டு சென்ற 41 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹாலி–எல பகுதியில் உள்ள வீதி கடவையில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் ஹாலி–எல பிரதேசத்தில் வசிப்பவர் என்றும் அவரை இன்று பதுளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

# ஐக்கிய அமெரிக்க முகவரக நிர்வாகி சமந்தாவுடன் தொலைபேசியில் உரையாடினார் பிரதமர் ரணில்

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவர் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குமிடையிலான தொலைபேசி ஊடான உரையாடலொன்று இடம்பெற்றுள்ளது. இலங்கை எதிர்கொண்டுள்ள இக்கட்டான சூழ்நிலையை வெற்றிகொள்ள தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம் என இதன்போது சமந்தா பவர் பிரதமருக்கு உறுதியளித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்கா பிரதிநிதிகள், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஜி7 அமைப்பு உள்ளிட்ட உதவி வழங்குநர்களுடன் இணைக்கமாகச் செயற்படுமாறும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு

வியாழக்கிழமை
26.05.2022

# செனகலின் திவாவோன் நகர் மருத்துவமனையில் தீ விபத்து

## தீயில் கருகி 11 பச்சிளம் குழந்தைகள் உயிரிழப்பு






செனகல் நாட்டில் உள்ள பொது மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 11 பச்சிளம் குழந்தைகள் உடல் கருகி உயிரிழந்தனர். மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான செனகல் நாட்டின் மேற்கு பகுதியில் திவாவோன் நகர் உள்ளது. இங்குள்ள பொது மருத்துவமனை ஒன்றில் பச்சிளம் குழந்தைகளுக்கான வார்டில் நேற்று நள்ளிரவு திடீரென தீ விபத்து ஏற்பட்டது. சில நிமிடங்களிலேயே தீ மளமளவென அடுத்தடுத்த இடங்களில் பரவியது.

இந்த தீ விபத்து தொடர்பாக தீயணைப்புத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள், நீண்ட நேரம் போராடி தீயை கட்டுப்படுத்தினர். தீ விபத்துக்கான காரணம் குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை. இருப்பினும் இந்த தீ விபத்தில் 11 பச்சிளம் குழந்தைகள் உடல் கருகி உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்திற்கு செனகல் நாட்டின் அதிபர் மேக்கி சால் இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்தியில், 'குழந்தைகளின் தாய்மார்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு, எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று தெரிவித்துள்ளார். செனகல் நாட்டின் மருத்துவமனைகளில் அடிக்கடி தீ விபத்துகள் நடந்த வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இதேபோல வடக்கு நகரமான லிங்குவேரில் ஒரு மருத்துவமனையில் பச்சிளம் குழந்தைகளுக்கான பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில், நான்கு குழந்தைகள் உயிரிழந்தன. கடந்த ஏப்ரல் மாதம், வடமேற்கு நகரமான லூகாவில் உள்ள ஒரு பொது மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் அறுவை சிகிச்சைக்காக காத்திருந்த ஒரு கர்ப்பிணிப் பெண், சிகிச்சை பெறுவதற்கு முன்பே தீ விபத்தில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதன்முறையாக இங்கிலாந்தில் தலித் பெண் மேயராக தேர்வு



இங்கிலாந்தில் ஈலிங் நகரசபை மேயராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தலித் பெண் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்திய வம்சாளியை சேர்ந்த மொகிந்தர் மிதா இங்கிலாந்தில் எதிர்க்கட்சியாக செயல்படும் தொழிலாளர் கட்சியை சேர்ந்தவர். தற்போது ஈலிங் கவுன்ஸிலில் உள்ள டோர்மர் வெல்ஸ் வார்டில் துணை மேயராக இருக்கும் இவர், லண்டனில் கடந்த 5ம் திகதி நடந்த நகரசபை தேர்தலில் இக்கட்சியின் சார்பில் மேயர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இது குறித்து தொழிலாளர் கட்சிவெளியிட்ட அறிக்கையில், "கவுன்ஸிலர் மொகிந்தர் மிதா ஈலிங் நகரசபை மேயராக அடுத்தாண்டு தேர்ந்தெடுக்கப்பட்டமையை எண்ணி மிகவும் பெருமைப்படுகிறோம். அவர் வரும் 2022-23ஆம் ஆண்டில் மேயராக பொறுப்பேற்பார்,'' என்று கூறப்பட்டுள்ளது.

## அமெரிக்க அரசுக்கு 1,160 கோடி ரூபா அபராதம் செலுத்த டுவிட்டர் நிறுவனம் சம்மதம்

அமெரிக்க அரசுக்கு ரூ.1,160 கோடி அபராதம் செலுத்த டுவிட்டர் நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது. வாடிக்கையாளர்களின் ரகசியத்தை காக்க தவறியதற்காக டுவிட்டருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. பல்வேறு நிறுவனங்கள் தங்களது விளம்பர தகவல்களை அனுப்புவதற்கு, டுவிட்டர் வாடிக்கையாளர் எண்களை தந்ததாக புகார் கூறப்பட்டது.




## பாகிஸ்தானில் இம்ரான் கான் ஆதரவாளர்கள் பேரணி பொலிஸார் மீதும் கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டது



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தலைமையில் நடைபெற்ற பேரணியில் வன்முறை ஏற்பட்டதால் காவல்துறையினர் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி கூட்டத்தை கலைத்தனர். பாகிஸ்தானில் உடனடியாக பொதுத் தேர்தல் நடத்த வலியுறுத்தி நேற்று பிரம்மாண்ட பேரணிக்கு முன்னாள் பிரதமர் இம்ரான் கான் அழைப்பு விடுத்து இருந்தார். இதில் பொது மக்களும் கட்சி ஆதரவாளர்களும் பங்கேற்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இந்த நிலையில் பேரணிக்கு அனுமதி மறுத்த பாகிஸ்தான் பிரதமர், பேரணியில் பங்கேற்றால் கைது செய்ய நேரிடும் என்று இம்ரான் கானுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

பேரணிக்கு தடை விதிக்கப்பட்டு இருந்தாலும் இம்ரான் கான் ஆதரவாளர்கள் ஏராளமானோர் இஸ்லாமாபாத்தில் குவிந்தனர். இம்ரான் கான் ஹெலிக்கொப்டர் மூலம் போராட்டக்களத்திற்கு வந்தார். பேரணிக்கு அனுமதி இல்லை என்பதால் அனைவரையும் கலைந்து போகும்படி காவல் துறையினர் உத்தரவிட்டனர். அப்போது காவல் துறையினர் மீது போராட்டக்காரர்கள் சரமாரியாக கற்கள் மற்றும் போத்தல்களை வீசினர். இதையடுத்து கூட்டத்தை கலைக்க கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டதால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. கண்ணீர் புகைக்குண்டுகள் வீசியும் தடியடி நடத்தியும் போராட்டக்காரர்களை பாதுகாப்புப் படையினர் விரட்டி அடித்தனர்.

இம்ரான் கான் ஆதரவாளர்களின் கல்வீச்சில் காவல்துறையினர் 12 பேர் படுகாயம் அடைந்தனர் என இஸ்லாமாபாத் நிர்வாகம் தெரிவித்துள்ளது. ஆதரவாளர்கள் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள இம்ரான் கான், அமைதியான பேரணிக்குள் காவலர்கள் புகுந்து வன்முறைக்களமாக மாற்றிவிட்டனர் என குற்றம் சாட்டியுள்ளார்.



## தண்டவாளத்தை கடக்க முயன்ற பேருந்து மீது ரயில் மோதி விபத்து

தெற்கு ஜேர்மனியில் ஆளில்லா ரயில்வே கேட் தண்டவாளத்தை கடக்க முயன்ற பேருந்து மீது ரயில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பேரூந்து ஓட்டுநர் உட்பட 3 பேர் படுகாயமடைந்த நிலையில் மேலும் சில பயணிகள் லேசான காயங்களுடன் உயிர் தப்பினர்.

ஜேர்மனியின் உல்ம் நகருக்கு அருகே சென்ற பயணிகள் பேருந்து ரயில்வே கேட் தண்டவாளத்தை கடக்க முயன்ற பொது நடுவில் சிக்கி கொண்டது.

இந்நிலையில் அதிவேகமாக வந்த ரயில் பேருந்து மீது பலமாக மோதியதில் பேருந்து தீப்பிடித்து முற்றிலும் எரிந்து நாசமானது. சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கட்சியின் பிடியிலிருந்து காவல்துறையை விடுவிக்க வேண்டும் தமிழக முதல்வருக்கு பா.ஜ.கவின் அண்ணாமலை கோரிக்கை



பா.ஜ.க. நிர்வாகியான பாலச்சந்திரன் என்பவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஊடகவியலாளர்களைச் சந்தித்து தனது எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டார்.

ஏதோ ஒரு காரணத்திற்காக பகையை வைத்துக் கொண்டு இதுபோல் செய்கிறார்கள். நான் பலமுறை சொல்லியிருக்கிறேன், காவல்துறை தன்னுடைய கண்ணியத்தையும் கம்பீரத்தையும் இழந்திருக்கிறது. காவல் துறை சுதந்திரமாக சட்டம்–ஒழுங்கை கையில் எடுத்து செயல்பட வேண்டும்.

தமிழக காவல்துறைக்கு என இந்திய அளவில் பெயர் இருக்கிறது. அரசியல் தலையீட்டால் அது இப்போது குறைந்துள்ளது. அதன் வெளிப்பாடுதான் பட்டப்பகலில் நடந்த இந்தக் கொலை. இதுபோன்று சமீபகாலமாக பல சம்பவங்கள் நடந்துள்ளன.

எனவே, தமிழக முதலமைச்சர் உடனடியாக கவனம் எடுத்து, ரவுடிகளை அடக்கி ஒடுக்க வேண்டும். மக்களுக்கு மிக முக்கியம் பாதுகாப்புத்தான். பாதுகாப்பே இல்லாத நிலையில் சாதாரண மனிதன் தன்னுடைய வேலையை எப்படிச் செய்ய முடியும்?

பா.ஜ.க. நிர்வாகியான பாலச்சந்திரன் கொலையில் தொடர்புடைய அனைவரையும் காவல்துறை கைது செய்ய வேண்டும். காவல்துறை கைது செய்யும் என்றும் அவர்களை சட்டப்படி தண்டிப்பார்கள் என்றும் நம்பிக்கை உள்ளது. கொல்லப்பட்ட பாலச்சந்திரனின் குடும்பத்தைப் பார்த்துக்கொள்வது கட்சியின் பொறுப்பு. அவர்களின் குடும்பம் எங்களுடைய குடும்பம் போன்றது.

இப்போதாவது காவல்துறை விழித்துக்கொள்ளட்டும். முதல்வர் அவர்கள் இப்போதாவது கட்சியின் பிடியில் இருந்து காவல்துறையை விடுவிக்கட்டும். அதை செய்வார் என்ற நம்பிக்கை இருக்கிறது. தொடர் கொலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி கமிஷ்னரிடம் கூறியிருக்கிறோம். உண்மையான குற்றவாளிகளை கைது செய்யவேண்டும்.

3 நாள்களுக்கு முன்பு காவல்துறை கொஞ்சம் உஷாராக இருந்திருந்தால் இந்தக் கொலையைத் தடுத்திருக்கலாம். 3 நாள்களுக்கு முன்பு காவல் நிலையத்தில் புகார் அளித்திருக்கிறார்கள். ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? காவல்துறை பாலச்சந்திரனை குற்றவாளிபோல் சித்தரிப்பதற்குக் காட்டும் வேகத்தை, குற்றம் செய்தவர்களைப் பிடிப்பதற்கு ஏன் காட்டவில்லை?, என்று பல கேள்விகளையும் அண்ணாமலை அந்தச் சந்திப்பில் எழுப்பியிருக்கிறார்.



## ஒடிசா பேருந்து விபத்தில் 6 பேர் சாவு முதல்வர் மம்தா பானர்ஜி இரங்கல்

மேற்குவங்காள மாநிலம் ஹவுரா மாவட்டம் உகம்பூர் பகுதியைச் சேர்ந்த 60 பேர் சுற்றுலா சென்ற பேருந்து, ஒடிசா மாநிலம் கலிங்கா சாடி அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அதில் 4 பெண்கள் உள்பட 6 பேர் பலியானார்கள். 45 பேர் காயம் அடைந்தனர். இதில் 15 பேரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு மேற்குவங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி இரங்கல் தெரிவித்துள்ளார். இது குறித்து மம்தா பானர்ஜி தனது டுவிட்டர் பக்கத்தில், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த எங்கள் குடிமக்கள் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதை அறிந்து வருத்தமாக இருக்கிறது. காயமடைந்த பலர் உயிருக்குப் போராடி வருகின்றனர்.

இறந்தவர்களுக்கான விரைவான பிரேத பரிசோதனை, காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை மற்றும் அவர்களுக்கு வீடு திரும்ப உதவுதல் போன்றவற்றுக்காக மேற்குவங்க நிர்வாகம் ஒடிசா அதிகாரிகளுடன் ஒருங்கிணைகிறது. பேரிடர் மேலாண்மை முதன்மைச் செயலாளர் மற்றும் எம்.எல்.ஏ. உதயநாராயண்பூர் தலைமையிலான உயர்மட்டக் குழு ஒடிசாவுக்கு விரைந்துள்ளது, என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர் யாசின் மாலிக்கிற்கு ஆயுள் தண்டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு



பயங்கரவாத அமைப்பிற்கு நிதி திரட்டிய வழக்கில் காஷ்மீர் பிரிவினைவாதத்தலைவர் யாசின் மாலிக்கிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த குற்றச்சாட்டில் காஷ்மீர் பிரிவினை வாதத்தலைவர் யாசின் மாலிக்கை இந்திய தேசியப் புலனாய்வு அமைப்பு கடந்த 2019 ஆம் ஆண்டு கைது செய்தது.

திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள யாசின் மாலிக் மீது பயங்கரவாதத்திற்கு நிதிதிரட்டினார் என தொடரப்பட்ட வழக்கு டெல்லியில் உள்ள என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்தது. இந்த வழக்கில் யாசின் மாலிக் குற்றவாளி என தீர்ப்பளித்து, தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பயங்கரவாதத்திற்கு நிதி திரட்டிய குற்றச்சாட்டு உறுதியான நிலையில் யாசின் மாலிக்கிற்கு ஆயுள் தண்டனை விதித்து டெல்லி என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## விசா முறைகேடு விவகாரம் தொடர்பாக கார்த்தி சிதம்பரம் மீது வழக்குப் பதிவு



சீனாவைச் சேர்ந்த 263 பேர்களுக்கு முறைகேடாக விசா வழங்குவதற்கு 50 லட்சம் ரூபா லஞ்சம் பெறப்பட்டதாக முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தின் மகனும், காங்கிரஸ் எம்.பியுமான கார்த்தி சிதம்பரம் மீது சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்தது. இது தொடர்பாக சென்னை, டெல்லி உள்ளிட்ட பல இடங்களில் சி.பி.ஐ. சோதனையும் நடத்தியது.

இந்த வழக்கில் கார்த்தி சிதம்பரத்தின் ஆடிட்டர் பாஸ்கரராமன் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. விசா முறைகேடு விவகாரத்தில் தனக்கு எந்த தொடர்பும் இல்லை என்று கார்த்தி சிதம்பரம் விளக்கம் அளித்து உள்ளார்.

இந்த நிலையில் விசா முறைகேடு விவகாரத்தில் சட்டவிரோத பணபரிவர்த்தனை தொடர்பாக கார்த்தி சிதம்பரம் மீது இந்திய அமுலாக்கத்துறை நேற்று வழக்குப் பதிவு செய்துள்ளது.



## சென்னையில் ஓமந்தூரார் தோட்ட வளாகத்தில் கலைஞர் கருணாநிதி சிலை நிறுவப்பட்டது

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் சிலை நிறுவப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி சட்டசபையில் 110 ஆவது விதியின் கீழ் அறிவித்தார். அதன்படி 1.56 கோடி ரூபா மதிப்பீட்டில் சிலை அமைப்பதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வந்தன. 16 அடி உயரம் கொண்ட இந்த சிலையை நிறுவ 12 அடி உயர பீடமும் அமைக்கப்பட்டது. சிலை வடிவமைக்கும் பணிகள் நிறைவடைந்தமையைத் தொடர்ந்து சென்னை ஓமந்தூரார் தோட்ட வளாகத்தில் கருணாநிதியின் சிலை நிறுவப்பட்டது.

சிலைத் திறப்பு விழா வருகிற 28 அம் திகதி மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிலையை இந்தியாவின் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு திறந்து வைக்கவிருக்கிறார். இதற்கான ஏற்பாடுகள் தமிழக அரசு சார்பில் செய்யப்பட்டு வருகின்றன.

# உள்ளூராட்சி மன்றங்களைக் கலைக்க கோரி காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்கள் கடிதம்

## அறுவர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்தனர்



(நூருல் ஹுதா உமர்)

கால நீடிப்பு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களைக் கலைக்க கோரி அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச சபையின் உறுப்பினர்கள் ஆறுபேர் கையெழுத்திட்டு மகஜரொன்றை கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

பிரதேச சபையின் உப தவிசாளர் ஏ.எம். ஜாஹீர் (ஸ்ரீ.ல.சு.கட்சி), உறுப்பினர்களான ஏ.ஆர்.எம். பஸ்மீர் (பள்ளிவாசல் சுயாதீன குழு), கே.குமாரஸ்ரீ (கோயில் சுயாதீன குழு), எஸ். நேசராஜா (த.தே.கூட்டமைப்பு), எம். ஜலீல் (அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்), கே.ஜெயதாஸன் ஆகியோரே இந்தக் கோரிக்கையை ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில் –

கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்குகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுள் காலம்கடந்த 2022 பெப்ரவரி மாதத்துடன் நிறைவுபெற்ற போதும் தற்போதைய அரசாங்கத்தினால் மேலும் ஒரு வருடம் – 2023 பெப்ரவரி வரை – அவற்றின் ஆயுள்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிநிலையிலும் உள்ளூராட்சிமன்றங்களிலுள்ள உறுப்பினர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு உள்ளிட்ட பல வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு காலநீடிப்பு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களைக் கலைத்து அதனூடாக கிடைக்கும் கொடுப்பனவுகளை மக்களின் செயல்திட்டங்களுக்காக பயன்படுத்த காரைதீவு பிரதேசசபையின் உறுப்பினர்களாகிய நாங்கள் எமது முழு சம்மதத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம். – என்று தெரிவித்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து அல் – மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா அமைப்பும் கடந்த வாரம் பிரதமர், ஜனாதிபதி உட்பட பலருக்கும் கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோடாரியால் வெட்டிக் கொலை அக்கரைப்பற்றில் செவ்வாயன்று

அம்பாறை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள சின்னமுகத்துவாரம் பிரதேசத்தில் குடும்ப தகராறு காரணமாக பக்கத்து வீட்டு இளைஞர் ஒருவரை மற்றொருவர் கோடாரியால் வெட்டிக் கொலை செய்த சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

சின்னமுகத்துவாரம் அக்கரைப்பற்று 9 ஆம் பிரிவைச் சேர்ந்த 33 வயதுடைய குணரட்ணம் குணதாஸா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரு குடும்பங்களுக்கும் நீண்டகாலமாகக் குடும்பத் தகராறு காணப்படும் நிலையில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குகள் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் இரு குடும்பத்திற்கும் இடையில் மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அதில் ஒருவர் பக்கத்து வீட்டுக்காரர் மீது கோடாரியால் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இதில் படுகாயமடைந்த நபர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 36 வயதுடைய சந்தேகநபரை பொலிஸார் தாக்குதல் மேற்கொண்ட கோடாரியுடன் கைது செய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பஸ் – லொறி மோதிய விபத்தில் தம்பலகாமத்தில் அறுவர் காயம்





(ஹஸ்பர்)

கண்டி – திருகோணமலை பிரதான வீதியில் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தியை அண்மித்த சுவாமி மலை பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் நேற்று இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று கனரக வாகனம் ஒன்றுடன் மோதியதில் அறுவர் காயமடைந்தனர். அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்

திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் வண்டியும் களனியை நோக்கி பயணித்த லொறியுமே இவ்வாறு மோதுண்டன. சுவாமிமலை பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் பஸ் வண்டி நிறுத்தப்பட்ட போது பின்னால் வந்த லொறி மோதியதால் இச்சம்பவம் நடந்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

காயமடைந்த அறுவரில் ஐவர் திருகோணமலை பொது வைத்தியசாலையிலும் ஒருவர் கந்தளாய் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்து சம்பவம் தொடர்பான விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நாவிதன்வெளியில் மினி சூறாவளி சேதம் அதிகம்; மக்களும் பாதிப்பு









(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் மத்தியமுகாம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வீசிய சிறிய சூறாவளி போன்ற பலத்த காற்று மற்றும் மழை காரணமாக பொதுமக்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், வணக்கஸ்தலங்கள் உட்பட பல்வேறு கட்டடங்களின் கூரைகள் பறந்துள்ளன. மரங்களும் சரிந்து விழுந்துள்ளன.

மாலை 03 மணியளவில் இடம்பெற இந்த அனர்த்தம் காரணமாக கடுமையான சேதங்களை மக்கள் சந்தித்துள்ளனர். மத்தியமுகாம், இரண்டாம் வட்டாரம், மூன்றாம் வட்டாரம், சவளக்கடை, நான்காம் காலனி ஆகிய இடங்களிளேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

வீடுகளுக்கு முன்னால் நின்ற மரங்கள் காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சரிந்து விழுந்தமையினால் வீடுகளுக்கும் வீட்டின் கூரைகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கிருந்து வெளியான மக்கள் வேறிடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். பலத்த பொருளாதார சேதமும் ஏற்பட்டுள்ளது. அரிசி ஆலைகளும், மேலும் பல வர்த்தக நிலையங்களும் இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ளமையினால் நிறைய நெல் மற்றும் அரிசி மூட்டைகள் மழையில் நனைந்து பாவனைக்கு உதவாத வகையில் மாறியுள்ளமையும், மக்களின் வாழ்வியல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது. அதிகாரிகள் அவசரமாக நடவடிக்கை எடுத்து இது தொடர்பில் உரிய நஷ்டஈடுகளை பெற்றுத்தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# போராட்டத்தில் மோதலைத் தடுக்குமாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தலை தேசபந்து நடைமுறைப்படுத்தவில்லை!

## நீதிமன்றில் குற்றச்சாட்டு

காலி முகத்திடல் மற்றும் கொள்ளுப்பிட்டி போராட்டங்களில் ஏற்படக்கூடிய மோதல்களைத் தடுப்பதற்காக, சம்பவம் நடப்பதற்கு முன்தினம் பொலிஸ் மா அதிபரால் வழங்கப்பட்ட எழுத்துமூலமான அறிவுறுத்தல்களை மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் நடைமுறைப்படுத்தவில்லைஎனசட்டமாஅதிபர்தெரிவித்தார்.

போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பானவழக்குநேற்று (புதன்கிழமை) கோட்டை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிமன்றில் உரையாற்றிய மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல், 'மே 09 அன்று போர்க்களங்களில் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்தினம் சம்பவத்தை தடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு கடிதம் எழுதியிருந்தார்.

மே 09 அன்று அலரி மாளிகையில் கூட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடர்பாக மே 08ஆம் திகதி பொலிஸ்மா அதிபருக்கு உளவுத்துறைத் தகவல் கிடைத்துள்ளது.

எனவே, உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் மோதல்கள் ஏற்படக்கூடிய பகுதியில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு தெரிவித்துள்ளார். எனினும் அவர் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

மே 9ஆம் திகதி அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் ஒரு தனித்துவமான குரல் அடையாளம் காணப்பட வேண்டும்' எனத் தெரிவித்தார்.

அதன்பின்னர் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரீஜென்சி அர்சகுலரத்ன உரையாற்றினார்.

'அலரிமாளிகை கூட்டத்தில் பேச்சாளர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார். நாங்கள் அதைத் தெளிவுபடுத்துகிறோம். ஆதாரங்கள் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவை என்பதால் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்ய வேண்டும்' எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து, பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் உரையாற்றிய ஜனாதிபதி சட்டத்தரணி சனத் ஜயமான்ன, 'தேசபந்து தென்னகோன் யாருடைய அனுமதியுடன் நெருப்பையும் பருத்தியையும் சேர்த்தார் என்பதை நாம் அறிய வேண்டும்.

கடந்த 8ஆம் திகதி பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியதையடுத்து, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தனக்கு கீழ் உள்ள சிரேஷ்ட அதிகாரிகளுக்கான ஜூம் மீட்டிங் ஒன்றை நடத்தியுள்ளார். ஊர்வலத்தைக் கலைக்க வேண்டாம் எனத் தெளிவாக அறிவுறுத்தப்பட்டுள்ளது' எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து, மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கருத்து என்ன என நீதிவான் திலின கமகே வினவினார்.

இதற்கு பதிலளித்த குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் மா அதிபர் போராட்டத்தைத் தடுக்க தெளிவான உத்தரவு பிறப்பித்ததற்கான ஆதாரம் இருப்பதால், அவர் சாட்சியா? அல்லது சந்தேக நபரா? என்று விசாரித்து வருகிறோம் என தெரிவித்தனர்.

மேலும் வழக்கின் பெரும்பாலான சாட்சியங்கள் மேல் மாகாணத்தில் உள்ளமையால், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை தற்போதைய பதவியில் இருந்து இடமாற்றம் செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார் என மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

குறித்த அறிவுறுத்தல்கள் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்த நீதிவான், சம்பவத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் சமமாக சட்டம் அமுல்படுத்தப்படாவிடின் மேலதிக நடவடிக்கையை மேற்கொள்வேன் எனவும் தெரிவித்தார்.

இதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த மற்றும் மிலன் ஜயதிலக்க உட்பட ஆறு சந்தேக நபர்களை ஜூன் 01 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

# 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு விதிக்கப்பட்டது தடை!

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகள் முடியும் வரை வெளிநாட்டுப் பயணத் தடையை விதிக்கும் வகையில், காலி முகத்திடல் மைதானத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலருக்கு கடவுச்சீட்டை ஒப்படைக்குமாறு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

மே 9 வன்முறையைத் தொடர்ந்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சிகளாகவும் முறைப்பாட்டாளர்களாகவும் இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னிலையாகியுள்ளனர்.

இந்த நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் கோரிக்கையை அடுத்து இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் இதற்கான அறிவித்தல் (நோட்டீஸ்) வழங்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி நுவான் போபேகே தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களை அடையாளம் காணும் போது சாட்சிகள் நாட்டில் இருக்க வேண்டும் என்பதற்காக வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது. சாட்சிகள் இல்லை என்றால் சந்தேக நபர்கள் இருக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சாட்சிகளாக வரத் தயாராக இருக்கும் மற்றவர்களுக்கு ஒரு பயத்தை ஏற்படுத்தும் என்றும் எவ்வாறாயினும் இந்தத் தடையை நீக்கக் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவுள்ளதாக போராட்டக்காரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஊடக சந்திப்பொன்றில் பேசிய கடவுச்சீட்டை ஒப்படைக்குமாறு நோட்டீஸ் அனுப்பப்பட்ட ஜீவந்த பீரிஸ் மற்றும் தம்பிட்டியே சுகதானந்த தேரர் ஆகியோர் அடக்குமுறையை நிறுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

'கடந்த 46 நாள்களாக நாங்கள் கோட்டாபய-ரணில் அரசாங்கத்தை தோற்கடித்து புதிய ஆட்சி யுகத்தை ஏற்படுத்துவதற்காக காலி முகத்திடல் மைதானத்தில் ஒன்று கூடியுள்ளோம்.

ஆனால் மே 9 அன்று, அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட கும்பல் இரக்கமின்றி எதிர்ப்பாளர்களைத் தாக்கியது. இதன் விளைவாக பொதுமக்கள் தெருக்களில் இறங்கி, இந்தத் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். பல போராட்டக்காரர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அல்லது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வரவழைக்கப்படுகிறார்கள். பல வழிகளில் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், 14 பேருக்கும் மேல் அவர்களது கடவுச் சீட்டை ஒப்படைப்பதற்கான நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

நாங்கள் அரச பயங்கரவாதத்துக்கு எதிராக நிற்கிறோம். கோட்டாபய-ரணில் அரசாங்கத்தை தோற்கடிக்கும் வரை இந்தப் போராட்டத்தை நிறுத்த மாட்டோம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதேநேரம், கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்தோம் எனவும் இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் அவர்கள் எந்த வகையிலும் எங்களுக்குள் பயத்தை ஏற்படுத்த முடியாது என்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் முன்னாள் அழைப்பாளர் லஹிரு வீரசேகர தெரிவித்துள்ளார்.

'நாங்கள் எங்கள் சாட்சியங்கள் மற்றும் வாக்குமூலங்களைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கினோம். அன்று இருந்த நபர்களைத் தெளிவாகக் குறிப்பிட்டோம். எங்கள் வழக்கறிஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கும்பல்களின் வீடியோக்கள் மற்றும் படங்களை வைத்துள்ளனர். எனவே சந்தேகநபர்கள் மீது சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. மேலும் மூளையாக செயற்பட்டவர்களுக்குப் பயணத் தடை விதித்து அவர்களைக் கைது செய்யுமாறும் அவர்கள் தவறினால் சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்தோம். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 420 குடும்பங்களுக்கு யாழில் உதவி!

## அரச அதிபர் அறிவிப்பு



யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 420 குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமென யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் –

வருமானம் குறைந்த மக்களுக்கு தற்பொழுது வழங்கப்படுகின்ற தொகையை விட மேலதிகமான தொகையைச் சேர்த்து தலா 5 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

அவ்வாறு நடைமுறைப்படுத்தும் போது யாழ்ப்பாண மாவட்டத்தில் 78 ஆயிரத்து 442 சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கும் 27 ஆயிரத்து 978 வறிய குடும்பங்களுமென மொத்தமாக ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 420 குடும்பங்கள் அந்த நன்மையைப் பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை சமுர்த்தி திணைக்களம் துரிதமாக மேற்கொண்டு வருகின்ற நிலையில் அந்த நிதி கிடைத்தவுடன் மே மற்றும் ஜூன் மாதங்களில் அந்த கொடுப்பனவு கிடைக்கும். – எனத் தெரிவித்துள்ளார்.

# மத்தியவங்கி ஆளுநராக தமிழர் ஒருவர் நியமனம்?

## ரணில் வகுக்கும் புதிய திட்டம்

நிதியமைச்சராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ள நிலையில் மத்திய வங்கி ஆளுநரில் மாற்றம் ஏற்படலாம் என தென்னிலங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, தற்போதைய மத்திய வங்கி நந்தலால் வீரசிங்கவுக்கு பதிலாக முன்னைய ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி நியமிக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திரஜித் குமாரசுவாமி இலங்கைத் தமிழர் ஆவார். இவர் கொழும்பு றோயல் கல்லூரி, இங்கிலாந்து ஹறோ பள்ளி ஆகியவற்றில் கல்வி கற்று பின்னர் கேம்பிரிச்சுப் பல்கலைக்கழகத்தில் இளநிலைப் பட்டம் பெற்றார். பின்னர் இங்கிலாந்து சசெக்சு பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.05.2022இல் வெளியிடப்பெற்றது.